# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

# விடைகள்

www.tamiledc.com

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

தமிழருடைய வீரத்தைப்பற்றிக் கூறும் நூல் ___புறநானூறு___.

( சிலப்பதிகாரம், நாலடியார், புறநானூறு )

1. ___நான்___ உணவை உண்டேன்.

( நான், நீ, அவன் )

2. வாய்க்காலில் நீர் ___சலசல___ என ஓடியது.

( சலசல, கீச்கீச், மடமட )

3. காலைக்காட்சி என்பதைப் பிரித்து எழுதினால் ___காலை+காட்சி___.

( காலைக்+காட்சி, காலைய் + காட்சி, காலை+காட்சி )

4. 700 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ___எழுநூறு___.

( எளுநூறு, எழுநூறு, எலுநூறு )

5. தகடூரை ஆண்ட மன்னன் ___அதியர்மான்___.

( பண்டாரவன்னியன், அதியர்மான், பாரி )

6. நீ தாயகத்தில் இருந்து ___எப்போது___ வந்தாய்?

( எது, என்ன, எப்போது )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

7. தமிழினி ____எழுதிய____ கவிதையை அப்பா பாராட்டினார்.

( எழுதிய, நடித்த, பேசிய )

8. பூ + பொழில் என்பதைச் சேர்த்து எழுதினால் ____பூம்பொழில்____ .

( பூப்பொழில், பூம்பொழில், பூம்ப்பொழில் )

9. உழத்தி ____விளைந்த____ நெல்லை அறுவடை செய்தாள்.

( விளைந்த, கட்டிய, எடுத்த )

10. கடல்வழியாகப் பொருட்களை ஏற்றி இறக்கப் பயன்படும் உந்து ____நீருந்து____ .

( விண்ணுந்து, பேருந்து, நீருந்து )

11. தண்ணீர் என்பதன் எதிர்ச்சொல் ____வெந்நீர்____ .

( வென்நீர், வென்னீர், வெந்நீர் )

12. தமிழில் இயல் இசை ____நாடகம்____ என மூன்று பிரிவுகள் உள்ளன.

( நாடகம், சிற்பம், ஓவியம் )

13. வாத்து ____குவாகுவா____ என்று கத்தும்.

( கீகீ, காகா, குவாகுவா )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

14. தமிழீழத்தின் தேசிய மலர் ___கார்த்திகைப்பூ___ .
( தாமரைப்பூ, கார்த்திகைப்பூ, மல்லிகைப்பூ )

15. அடங்காப்பற்று எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட இடம் ___வன்னி___ .
( யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை )

16. இலக்கியன் நேற்றுக் கடற்கரையில் மணல் வீடு ___கட்டினான்___ .
( கட்டுகின்றான், கட்டினான், கட்டுவான் )

17. வாழைக்குலையில் காய்கள் ___சீப்புச் சீப்பாக___ . இருக்கும்.
( சீப்புச்சீப்பாக, குலைகுலையாக, கொத்துக்கொத்தாக )

18. கிழமையில் நான்காவது நாள் ___வியாழன்___ .
( வெள்ளி, வியாழன், புதன் )

19. லூவரில் சிறப்பு வாய்ந்த ___ஓவியங்கள்___ காணப்படுகின்றன.
( சிலைகள், முத்திரைகள், ஓவியங்கள் )

20. நாங்கள் தாயகத்துக்கு ___விண்ணுந்தில்___ செல்லலாம்.
( விண்ணுந்தில், சிற்றுந்தில், தொடருந்தில் )

*ஒவ்வொரு விடைக்கும் 01 புள்ளி.*
*விடையில் எழுத்துப்பிழை இருப்பின் புள்ளிகள் இல்லை.*

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| கடகட | கலீர்கலீர் | பூவும் பிஞ்சும் |
| ~~பளபள~~ | விறுவிறு | தடதட |

எ - கா

குயிலியின் வளையல்கள் பளபள என மின்னின.

1. மாமரத்தில் பூவும் பிஞ்சும் காணப்பட்டன.

2. பள்ளிக்கு நேரமாகிவிட்டதால் இனியன் விறுவிறு என்று நடந்து சென்றான்.

3. அரங்கில் ஆடிய மங்கையின் சலங்கை கலீர் கலீர் என்று ஒலித்தது.

4. கள்வன் மாடிப்படிகளில் தடதட என்று ஓடினான்.

5. மாட்டு வண்டி கற்பாதையில் கடகட எனச் சென்றது.

*ஒவ்வொரு விடைக்கும் 02 புள்ளிகள்.*
*விடையில் எழுத்துப்பிழை இருப்பின் புள்ளிகள் இல்லை.*

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

**எ - கா**

நிலா இரவில் ஒளியைத் ___தருகின்றது___ .

1. தமிழினி ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் ___பெற்றாள்___ . (முக்காலமும்)

2. வாழை நாரில் பூமாலை ___கட்டுவர்___ . (மூவிடமும் முக்காலமும் உயர்திணைக்குரிய பாலும்)

3. நேற்று எனது பள்ளியில் ஆண்டுவிழா ___நடைபெற்றது___ .

4. குழந்தை தொட்டிலில் நன்றாக ___உறங்கியது___ . (முக்காலம்)

5. மாமி தாயகத்திலிருந்து நாளை ___வருவார்___ .

***ஒவ்வொரு விடைக்கும் 02 புள்ளிகள் .***

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4) **கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புவோம்.**

**எ - க**

ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து ___நீளமாக___ இருக்கும்.
(நீலமாக, ~~நீளமாக~~)

1. அண்ணா தமிழ்ப் ___பள்ளிக்கு___ ச் சென்றார்.
(பள்ளிக்கு, பல்லிக்கு)

2. கொக்கின் ___அலகு___ நீண்டு இருக்கும்.
(அலகு, அழகு)

3. வாழைப் ___பழத்தில்___ சத்துகள் நிறைந்திருக்கின்றன.
(பழத்தில், பலத்தில்)

4. மீன்கள் ___வலையில்___ சிக்கின.
(வளையில், வலையில்)

5. அம்மா முற்றத்தில் ___கோலம்___ போட்டார்.
(கோளம், கோலம்)

***ஒவ்வொரு விடைக்கும் 01 புள்ளி.***

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | யா | ழ் | ப் | பா | ண | ம் | மு |
| ரு | மூ | ம | ன் | னா | ர் | நா | ல் |
| க் | து | வ | வு | னி | யா | ல | லை |
| கு | ரை | ந | ல் | வ | ழி | டி | த் |
| ற | ஆ | த் | தி | சூ | டி | யா | தீ |
| ள் | ம | ணி | மே | க | லை | ர் | வு |
| ம | ட் | ட | க் | க | ள | ப் | பு |
| தி | ரு | கோ | ண | ம | லை | | |

| நூல்கள் | இடங்கள் |
|---|---|
| எ - கா திருக்குறள் | யாழ்ப்பாணம் |
| மூதுரை | மன்னார் |
| ஆத்திசூடி | முல்லைத்தீவு |
| நாலடியார் | மட்டக்களப்பு |
| மணிமேகலை | திருகோணமலை |
| நல்வழி | வவுனியா |

***ஒவ்வொரு விடைக்கும் 01 புள்ளி.***

புள்ளிகள்10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

6) **மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| மோர் | ~~நன்மைகள்~~ | வண்டி |
| பால் | யானை | ஆடை |

**எ - கா**

விலங்குகளால் எங்களுக்குப் பல **நன்மைகள்** கிடைக்கின்றன. ஆடு, ஆ என்பன **பால்** தருகின்றன. பால் சத்தும் சுவையும் உடையது. ஆவின் பாலில் இருந்து தயிர், **மோர்**, வெண்ணெய், நெய் என்பன பெறப்படுகின்றன. எருது, குதிரை போன்ற விலங்குகள் **வண்டி** இழுக்கப் பயன்படுகின்றன. செம்மறி ஆட்டின் மயிரிலிருந்து கம்பளி **ஆடை** செய்யப்படுகிறது. **யானை** பளுவான பொருட்களைத் தூக்குவதற்குப் பயன்படுகின்றது. நாய் வீட்டுக் காவலுக்கும் வேட்டைக்கும் உதவுகின்றது.

*ஒவ்வொரு விடைக்கும் 02 புள்ளிகள்.*
*விடையில் எழுத்துப்பிழை இருப்பின் புள்ளிகள் இல்லை.*

புள்ளிகள் 10

தமிழ்க் கல்விப் பேரவை

7) **ஒரு சொல்லில் விடை எழுதுக.**

**எ - கா**

பண்டாரவன்னியன் யாருடன் போர் புரிந்தான்?

ஆங்கிலேயருடன்

1. முக்கனிகளில் ஒன்றின் பெயரைத் தருக.

மா , பலா , வாழை ( இவற்றுள் ஒன்று)

2. கொன்றைவேந்தன் என்ற நூலை எழுதியவர் யார் ?

ஔவையார்

3. பிரான்சு நாட்டின் தலைநகரின் பெயர் என்ன?

பாரிசு

4. அதியர்மான் ஏன் காட்டுக்குச் சென்றான்?

வேட்டையாட

5. சிலப்பதிகாரம் யாரால் எழுதப்பட்டது?

இளங்கோஅடிகளால்

***ஒவ்வொரு விடைக்கும் 02 புள்ளிகள்.***

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

8) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

காகம் ஒன்று மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அது தாகத்தினால் தண்ணீரைத் தேடி அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. காகம் களைப்புடன் மரத்தில் வந்து அமர்ந்தது. அப்போது மரத்தின் கீழ் ஒரு பானையைக் கண்டது. அப்பானையுள் சிறிதளவு நீர் இருந்தது. அந்த நீரைக்குடிக்க நினைத்தது. ஆனால் காகத்திற்குப் பானையில் இருந்த தண்ணீர் எட்டவில்லை. உடனே காகம் சிறிய கற்களைப் பொறுக்கிப் போட்டது. கற்களைப் போடப் போடத் தண்ணீர் மேலே வந்தது. காகம் அத் தண்ணீரைக் குடித்தது. காகத்தின் தாகம் அடங்கியது. காகம் தன் கூட்டிற்குப் பறந்து சென்றது.

எ - கா

எது கூடு கட்டி வாழ்ந்து வந்தது?
காகம் கூடு கட்டி வாழ்ந்து வந்தது.

1. காகம் எதைத் தேடி அலைந்தது?
காகம் தண்ணீரைத் தேடி அலைந்தது.

2. மரத்தின் கீழ் காகம் எதனைக் கண்டது?
மரத்தின் கீழ் காகம் பானையைக் கண்டது.

3. பானைக்குள் என்ன இருந்தது?
பானைக்குள் நீர் இருந்தது.

4. எவற்றைப் போடப் போடத் தண்ணீர் மேலே வந்தது?
கற்களைப் போடப்போடத் தண்ணீர் மேலே வந்தது.

5. காகம் எங்கே பறந்து சென்றது?
காகம் கூட்டிற்குப் பறந்து சென்றது.

**ஒவ்வொரு விடைக்கும் 02 புள்ளிகள்.** புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

கருத்துள்ள முழுமையான ஒவ்வொரு சொல்லியத்திற்கும் 03 புள்ளிகள்.

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை